உளி 1 | ஓசை 31 | செப்டம்பர் - 2019 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

முகப்பு ஓவியம் :
கமல் காளிதாஸ்

உள் ஓவியங்கள் :
கலைமாமணி அன்பழகன்
அழ.ரஜினிகாந்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
9469375575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| பிரேம பிரபா | - 4 |
| சோ. நளாயினி | - 5 |
| கதிர் அவன் | - 6 |
| ஜானு இந்து | - 7 |
| சத்யா தமிழச்சி மருதாணி | - 8 |
| மருதன் பாலமுருகன் | - 9 |
| கோ. ஸ்ரீதரன் | - 10 |
| பிரபுசங்கர்_க | - 11 |
| சௌவி | - 12 |
| முகமது பாட்சா | - 13 |
| வீ.கதிரவன் | - 13 |
| ஜே.பிரோஸ்கான் | - 14 |
| தமிழ்க்குமரன் | - 14 |
| செந்தாரப்பட்டி இரா. செல்வக்குமார் | - 15 |
| சந்துரு | - 16 |
| அகன் | - 17 |
| கார்த்திகேயன் மாகா | - 18 |
| சாமான்யன் | - 19 |
| யாழ் தண்விகா | - 20 |
| வினோதன் | - 21 |
| ஷீலா_கடற்கரை | - 22 |
| சகா | - 23 |
| அகதா | - 24 |
| ஜே.ஜே.அனிட்டா | - 24 |
| ஏ.நஸ்புள்ளாஹ் | - 25 |
| சிபி பாரதி | - 26 |
| மா.காளிதாஸ் | - 27 |
| தங்கேஸ் | - 28 |
| ரோஷான் ஏ.ஜிப்ரி | - 29 |
| சுரேஷ்பாபு_ராசேந்திரன் | - 30 |
| ரா.ராஜசேகர் | - 31 |
| பிரபுசங்கர்_க | - 32 |
| சக்திஅருளானந்தம் | - 33 |
| ராம் பெரியசாமி | - 33 |
| மதுசூதன் | - 34 |
| முனியாண்டி_ராஜ் | - 35 |
| தமிழ்மணவாளன் | - 35 |
| ரிஸ்கா முக்தார் | - 36 |
| லக்ஷ்மி | - 37 |
| பா_வினோத்குமார் | - 38 |
| சாண்டில்யன் விவேகானந்தன் | - 38 |
| நயினார் | - 39 |
| மயிலாடுதுறை இளையபாரதி | - 40 |
| வீரசோழன் க.சோ. திருமாவளவன் | - 40 |
| மு.ச.சதீஷ்குமார் | - 41 |
| கோ.கலியமூர்த்தி | - 42 |

# வழி அனுப்பு முத்தங்கள்



ஓவியம் : அன்பழகன்

பாலுக்கு அழும் ஒரு குழந்தையின்
ஆரம்ப அழுகையை ஒத்த
எல்லையோரங்களில்
தொடர்ந்து பலவீனமாகக் கேட்கும்
எதிரிகளின் வெடிச் சிணுங்கள்களுடன்
வந்து சேர்ந்தது போர்க்களத்தில் இருந்து
எனக்கு ஒரு அவசர அழைப்பு மடல்.
கீற்றாக சில மேகச்சாட்டைகள்
அக்கினிப் பந்தை தட்டி எழுப்ப
இரவை மெதுவாக மென்று தின்னும்
பகலவனின் முதல் முற்றுகைப் போராட்டம்.
ஆளற்ற புகை வண்டித்தட மேடையில்
என்னை வழியனுப்ப காத்திருக்கிறாய் நீ..
நம் இருவரின் நெடுந்தூரப் பார்வையில்
அறுவடை முடிந்த வயல் வெளிகள்
காலை வெய்யிலில்
தங்கமென மினுமினுக்கிறது.
சீக்கிரம் போர் முடிந்து விடுமென
உன்னை நான் சமாதானப்படுத்த
பால் பிடித்த சோளக் கதிர்களின் மேல்
பறவைகள் அமரும் சமயம்
என்னைக் காண வந்து விடுவாயா என்று
குழந்தைத்தனமாக்க் கேட்கிறாய் நீ.
தொடர் மழை தணிந்து
அரை மனதுடன் மேகங்கள்
கலைந்து போன ஒரு மாலையில்
ஏக்கத்துடன் கடற் பறவைகள்
நம்மை கடந்து போகும் சமயம்
நாம் பகிர்ந்து கொண்ட மொத்த முத்தங்களை
மீண்டும் ஒருமுறை
சரி பார்த்து கணக்கிடுவதற்குள்
போர் முடிந்து மீண்டும்
நான் வந்து விடுவேனென்று
செல்லமாகச் சீண்டுகிறேன் உன்னை நான்.
போர் வீரனின் காதலி அழக்கூடாதென்று
உன் கண்களைத் துடைத்து
வழி அனுப்பு முத்தம் கொடுக்க
அவற்றையே பறவைகளின் பாட்டாக மாற்றி
என் துணைக்கு வழி அனுப்புகிறாய்
கண்களில் தளும்பும் கண்ணீரை
என் பார்வையிலிருந்து மறைத்து.

◆ பிரேம பிரபா



ஓவியம் : அன்பழகன்

போராடித் தோற்றவர்களிடம்
நீ ஏன் தோற்றாயெனக் கேட்காதீர்கள்.

அங்கே காட்டிக் கொடுப்புக்களின்
ரேகை படிந்திருக்கலாம்.
விசுவாசித்தலின் ஆழத்தை அறியாதவர்கள்
கூட இருந்திருக்கலாம்.

துரோகத்தை மறைத்து நேச
முகமுடிகளையணிந்தவர்கள்
சிலாகித்த வார்த்தைகளில் வசியமாகித்
தம்மை இழந்திருக்கலாம்.

ஆனாலும் அவர்கள் போராடினார்கள்.
ஊமையாய் அழுவதைவிடுத்து
ஆக்ரோசமணிந்தவர்களாயிருந்திருப்பார்கள்.

போட்டிகளுக்கும், பொறாமைகளுக்கும்
நடுவே உண்மையாய் உழன்றிருப்பார்கள்.

அவர்கள் தோற்றுப் போனதுக்கு
கேள்விகள் கொண்டு துளையிடும்
நீங்களுமோர்
காரணியாகவுமிருந்திருக்கலாம்.

போராட்டங்கள் தோற்றதற்கு
போராடியவனே காரணமென நம்பாதீர்கள்;
அது வெறும் மாயையே.

◆ **சோ. நளாயினி**

சிலர் அவளை
ஒத்தவீட்டுக்காரி
என்று தான் அழைப்பார்கள்

சிலர் அவளை
அலங்கார சிறுக்கி
என்று தான் சொல்வார்கள்

சிலர் அவளை
மேனா மினுக்கியென்று
வசைபாடுவார்கள்

சிலர் அவளை
ஊர் மேய்பவளென்று
சொல்லுவார்கள்

சிலர் அவளை
பண பித்து பிடித்துவளென்று
கூறுவார்கள்

இன்னும் சிலர் அவளை
தே வில் தொடங்கி யா வில்
முடியும் வார்த்தையொன்றுக்குள்
சுருக்கி கொள்வார்கள்

அவள் வீட்டின் கதவுகளை
இரவில் தட்டிப்பார்த்து
ஏமாற்றத்தோடு திரும்பிய
சபலம் தலைக்கேறியவர்கள்
மீசை வெளுத்த பெருசுகள்
நரம்பு புடைத்த இளவட்டங்கள்
இன்னும் ஊரில் உள்ள சிலரால் அவளுக்கு
தங்கள் விருப்பப்படி
தனித்தனி பெயரினை
வைத்து கொண்டார்களே தவிர

கணவனை இழந்து தனித்து வாழும்
#அவளுக்கு_கண்ணகியென்கிற
இன்னொரு நிஜப்பெயரும் இருந்தது ..!

◆ **கதிர் அவன்**



**ஓவியம் : அன்பழகன்**



ஓவியம் : அன்பழகன்

தீர்மானங்களற்றதொரு பொழுதில் உனது
இதயத்திருந்து மலர்கிறதொரு சொல்

உடலாடும் மென்னதிர்வுகளை தனது திசையின்
வழி கடத்தவியல்கிற வசீகரக்குரலுனக்கு

நித்தியம் படிந்தவுன் சொற்கள் நீரின் மேல்
அசையும் உதிர்ந்த இலையொன்றைப்
போலவே மனதிற்குள் மிதந்தலைகின்றன

அடுத்த சந்திப்பில் நேசத்தின் ஞாபகமாய்
ஏதேனுமொன்றை உனக்கே உனக்கென
கையளிக்க வேண்டும்

உனது புன்னகையின் மேல் கவிந்து கிடக்கும்
துவக்கத்தையும் முடிவையும் நான் அறிந்து
கொள்ளும்படி திறந்து வைக்கிறாய்

உனது கண்களின் ஓரத்தில் படிந்திருக்கும்
கனவொன்றை கொய்துகொள்ள
என்னை அனுமதி

உனது நேசத்தின் பெருவனப்பில் விரியும்
சொற்களில் இசையும் ஒரு புன்னகையை
உனது உதடுகளின் ஓரத்தில் பதியமிடுகிறேன்

தூரங்களின் பிரிவு நமது அகங்களை
மிகுந்த நெருக்கத்தில் இருத்துகிறது

பின்னிரவின் தனித்த இருண்மைக்குள்
மிகையாதவுன் சொற்களால் நித்தியமல்லியின்
வாசனையென என்னுள் நிரம்பிவழிகிறாய்

கசியுமென் இதயத்தை உனது முத்தங்களால்
துடைக்கும் முன் ஒரு முறை என்னைப் பார்

நமக்கிது திரும்புதலின் காலமாயிருக்கட்டும்...

◆ **ஜானு இந்து**

# அறுத்துப்புடுவேன் அறுத்து...



ஓவியம் : அன்பழகன்

குவார்ட்டர் விஸ்கியே வாங்கி அப்படியே
ராவா கவித்திட்டு தொட்டுக்க கடலைபருப்பிய
கொறிச்சுகிட்டே உள்ளாரவந்தான்...

வாசல்படியில்லயே நில்லுன்னு சொன்ன
சேட்டு விரட்டாம பொளந்துகிட்டு
அடங்கியிருந்தாரு...

கறிக்கடை பாயி
குடலும் குண்டாமணியா சாதிக்கலவரத்துல
சரிஞ்சு கூழாக்கிடந்தாரு..

பொன்னுக்கலர் கம்மின்னு சீர்வரிசையில
சேன்ட்ரோவை சேர்க்கச்சொன்ன
மாப்பிள்ளை போன பைக்கு பிரேக்புடிக்காம
கொதிக்கிற தார்டின்ல தாராக்கிடக்குறாரு
உருத்தெரியாமே...

பின்னாடி பக்கமா வா கஞ்சி ஊத்துறேன்னு
சொன்ன தம்புராட்டி பொன்டாட்டியோட
பன்னிமுட்டுன பொணம்...

இரண்டு ரூபாபோட்டா இரண்டு துளி திருநீர
விசிறிட்டு போறதும்.
பத்து ரூபா போட்டா பத்து வாட்டி மணியடிச்சு
தீபாராதனைக் காட்டுற மணி ஐயரோட
பொணம்..

தொட்டு தொட்டு கன்றிப்போன உடம்போட
கொஞ்சமா துணியோட துணைமில்லாம
தனியா தூங்குற மல்லிகா அக்காவோட
அழகான பொணம்..

சுரண்டி சுரண்டி இரண்டு கிலோவுக்கு
ஒன்னேமுக்காகிலோ சரியா அளந்துப் போடுற
ரேசன் கடை கர்ணப்பிரபு
வோட முக்கால்பொணம்..

தன்னை காதலிக்கலையின்னு
சொன்னவளஆசிட் அடிச்சுட்டு ஆத்து சுழல்ல
சிக்கி மீனுங்க கடிச்சு காணா பொணமா போன
பொணம்...

இரண்டேமுக்கால் வயசு பாப்புவை
சுக்குமிட்டாய் வாங்கித்தரேன்னு கூட்டியாந்து
சிதைச்சு விட்டவன.. யாரோ உறுப்பறுத்து
ஊறுகாய் போட்ட பார்சலா குப்பையில்
வீசினப்பொணம்...

ஊரை ஏமாற்றி மக்க மனுசங்கள சுரண்டி
வயிறையும் குண்டியும் பெருசாக்கிகிட்ட
அரசியல்வாதிய அனுதாப ஓட்டுக்கு தாரை
வார்த்த அழுகிய பொணம்...

இவ்வளவு எல்லாத்தையும்
கணக்கெடுத்துப்பார்த்து அறுத்து முடிக்கனும்
இன்னைக்கு பொழுதுக்குள்ளேன்னு தன்னோடு
ஆயுதங்கள எடுத்துக்கிட்டு
விரசாப்போனான் உசிரோட இருக்கும்
போது தொடவேண்டாமின்னு சொன்ன
பொணங்களதொட்டு அறுத்தெடுக்க பிணம்
அறுக்கும் காத்தமுத்து இன்னுமொரு குவார்ட்டர
சரிச்சுகிட்டு...

◆ **சத்யா தமிழச்சி மருதாணி**



ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

இன்று என் வானம் பரந்திருக்கிறது
சிந்தனை விரிந்திருக்கிறது
அதற்கு பின்னால் ஒரு சிட்டுகுருவியின்
சிறகுகள் இருந்தது...

மலர்ந்த இந்த வண்ண உடைகளுக்குள்
உலர்ந்த ஒற்றை சிவப்பு அங்கி
மறைந்திருந்தது...

அதன் கரங்களுக்கு வலு இருந்தது
உதடுகள் ஓயாமல்
காரல் மார்க்ஸையும், லெனினையுமே
உச்சரித்து கொண்டிருந்தது
அதனால்தானோ என்னவோ
இன்று வரை
உழைப்பை மட்டுமே
மூலதனமாய் கொண்டிருக்கிறது...

இப்போதும் கூட
பொதுவெளிகளில்
எங்கேனும் காண கூடும்
பாதங்களில் செருப்புகளற்று
ஒரு சிவப்பு துண்டை
தலையில் சுற்றியபடி அல்லது
ஆலம் விழுதென
தோளில் ஊஞ்சலாடும் துண்டுடன்
வெகு தூரங்களை கடந்திருக்கும்...

எந்த ஒரு மழையையும்...
வெயிலையும்...
குளிரையும்...
அந்த ஒரு சிவப்பு துண்டின் வாயிலாகவே
சுலபமாய் கடந்து விடும் அதனிடம்
மழையை கேட்டேன்
மேகத்தை தந்தது...
நிழலை கேட்டேன்
விதையை தந்தது...
வாழ்வை கேட்டேன்
நம்பிக்கையை தந்தது...

அப்புறம் ஒருநாள்
இந்த நரகத்தில் வாழ்வதற்கு
நம்பிக்கை மட்டும் போதாதென்று
அந்த சிவப்பு துண்டையும்...
ஒரு உளியும்... சுத்தியலையும் தந்தது...
அது தேய்ந்திருந்தது
ஆனாலும் கூர்மையாகதானிருந்தது...

நம் தந்தைகளை விடவும்
சிறந்த தொழிலாலர்கள் இருந்ததில்லை
தந்தையரை நினைவு கூர்வோம்...
மே தினம் போற்றுவோம்....

◆ மருதன் பாலமுருகன்



ஓவியம் : அன்பழகன்

உடலெங்கும்
அசௌகர்யம் ஊறுகிறது
வெட்கமது
பிடுங்கி தின்கின்றது
வயது வந்த
மகவுகள் இரண்டும்
சிரித்தபடி
கட்டை விரலுயர்த்தி
காண்பிக்கும்போது.

எப்போதுமே
கடிந்து கொள்ளா
மாமியார்
நேரம் கரைவதை
வலியுறுத்தி மென்மையாய்
கட்டளையிடுகிறாள்.
முன்னொரு நாள்
அறை வரை வந்து
அறவுரை பகிர்ந்த
அனுபவஸ்தர்களே
புதிதாய் அறிவுரைக்க
என்ன இருக்கிறதென
புன்முறுவலித்து மட்டுமே
வருகின்றனர்
நட்புகளின்
குறும்பு கலந்த
வாட்சப்புகளினால்
ஒளிர்ந்தபடியே இருக்கின்றது
என் அலைபேசி
தொடுதிரை
எட்டடி நடந்தால்
எட்டி விட முடிந்த
தினசரி பழக்கப்பட்ட அறைக்கு
கோடை விடுமுறை முடிந்து
பள்ளி செல்லும்
குழந்தையென மனம்
முரண்டு பிடிக்கின்றது.
மல்லி மாலையிட்ட
போட்டோவில் இலகுவாய்
சிரிக்கின்றான்
முன் அனுபவம் தந்தவன்
கட்டிலின் மேல்
காத்திருக்கின்றான்
பின் வந்து இணைந்தவன்
முத்தமிடும்போது
இந்த
முகத்தில்
அந்த முகச்சாயல்
தோன்றிடா வலிய
வரம் தா தெய்வமே.....

◆ கோ. ஸ்ரீதரன்



ஓவியம் : அன்பழகன்

தலையணையில் சாய்ந்து
இருவிழிகளை மூடியபடி
உறக்கத்தை தேடிச்சென்று
கொண்டிருக்கிறேன் நான்
போகும் வழியில் சாலையின்
இருபக்கங்களிலும் வரிசையாக
நின்றபடி என்னை ஏளனமாக
பார்த்து கொண்டிருக்கிறது
என் மன உளைச்சல்கள்
கடிவாளம் கட்டிய குதிரையாய்
பக்கவாட்டில் பார்வையை
சிதற விடாமல்
உறக்கத்தை நோக்கி
மிக மிக வேகமாக செல்கையில்
எதிரே குறிக்கிடுகிறது
நெருங்கியவர்களின் குறட்டை சத்தங்கள்
இம்முறை செவிகளை மென்பஞ்சுகளால்
அடைத்துக் கொண்டு
ஒரு வழியாக உறக்கத்திற்குள்
நுழைந்த அரைமணியில்
மீண்டும் விழித்தெழுகிறேன்
ஒரு கவிதையின் கனவில்....

#கவிதையின்கனவு

◆ பிரபுசங்கர்_க



ஓவியம் : அன்பழகன்

பனைமரத்தின் உச்சியிலிருந்து குதித்து
உன் மார்பில் விழுகிறேன்
நீ கருக்கருவாளெடுத்து வெட்டி வீசுகிறாய்
சூரியனைத் தின்றுவிட்டு
இருட்டைத் துப்பும் வானத்திடம்
என் காமத்தை நட்சத்திரங்களாய் ஏற்றி
வைக்கிறேன்
உன் நாணம் முகில்களாய் வந்து
மூடிக்கொள்கிறது
ஆடை கழட்ட அவ்வளவு போராட்டம்
ஒரு நதியின் ஓசையோடு மேலேறும் சிரிப்பை
தூக்கி வானத்தில் வீச
அது பௌர்ணமியாகி வெளிச்சமிடுகிறது
அத்தனையையும்
கோயில் மணியோசையில் பயந்தெழும்
புறாக்களின்
சிறகுகளாய் துடிக்கின்றன உன் இமைகள்
வண்ணத்துப்பூச்சியின் இருதயத்துடிப்பின்
சப்தங்களென
திடீரெனக் கடக்கும் ரயிலோசையில்
இன்னும் இறுக அணைக்கிறாய்
எப்போதோ விழுந்த பனையோலையை
காற்றாடியாக்கி ஓடிக்கொண்டிருக்கும்
சிறுவனின்
மகிழ்ச்சியில்
இன்னும் கொஞ்சம் உயரமாகிறது பனைமரம்

◆ சௌவி

# விலையானது ஓவியம்

அந்த ஓவியம்
கோடுகளால் சில கதைகளைப் பேசியது...
பார்வையாளர்கள்
சில கதைகளை எழுதிக் கொண்டிருந்தார்கள்
ஆத்ம தரிசனம் என்று
ஒருவன் ஆழ்ந்த நித்திரைக்குச் சென்றான்...
அடங்காத வன்மம் என்று
ஒருவன் விளக்கம் பகிர்ந்தான்...
விலங்குகளின் உடையணி நாகரீகம்
எத்தனை அருமை என்று
ஒருவன் சிலிர்க்க... இதிகாசக் காலம்
இடறி விழுந்து கொண்டிருந்தது...
ஆபாசம் அழகென்றும் வசனம்
வண்ணங்களைத் தெளித்தவன் வரைவை
மறந்துவிட்டான் எனச் சிலர் சிரிக்க
விலையானது ஓவியம்..
பெரும் ரகசியத்தை ஏந்திக்கொண்டு.

◆ **முகமது பாட்சா**



**ஓவியம் : அன்பழகன்**

புதிதாக வந்த பொழுது
வீட்டின் நடு அறையினை
நிறைத்திருக்கும்
நகர்வல பொழுதுகளில்
தெரு விழி விரிக்க
எங்களை தன்
தோளில் சுமக்கும்
அவ்வப்போது அதற்கு
உடல் நிலை சரியில்லை என
கொஞ்சம் கொஞ்சமாக
நிராகரிக்கப்பட்டு
கொல்லைப்புறங்களில்
ஒதுக்கப்படும்
முதியோர் போலவே
செடி கொடிகளோடு
பேசிக்கொண்டு
அனாதையென நிற்கிறது
அப்பாவின் மிதிவண்டி......

◆ **வீ.கதிரவன்**

# அனைவருக்குமான சொல்

மரமொன்றின் கிளையொன்றிலிருந்து
அந்தச் சொல்லை பிரிக்கிறேன்
அழுத கண்களோடு நிலம் சேரும்
அந்தச் சொல்லை
நேற்று எனது நண்பனின் உம்மாவும்
இன்று தோழியுமென சுயந்து சென்றார்கள்.
நாளை நானாகவும் இருக்கலாமென
அந்த மரத்தின் கிளையின் கீழ்
அமர்ந்து கொண்டெழுதுகிறேன்
மரணம்
அனைவருக்குமான சொல்.

◆ **ஜே.பிரோஸ்கான்**



**ஓவியம் : அன்பழகன்**

மின்சாரம் தடைப்பட்ட
ஒரு பின்னிரவில்
வாசலில் பாய்விரித்து
மல்லாந்து படுத்து
கையிரெண்டை தலையணையாக்கி
விண்பார்த்து விழித்தவிழி விழித்தபடியிருக்க...
காதிரண்டும் கடன்கொடுக்கப்படுகிறது
தூரத்துக்காற்று கொண்டுவந்த
எண்பதில் பழகி
தொண்ணூறைத்தொட்டு காற்று தன்
பதிவேட்டில் எழுதிய கீதங்களுக்கு..!
மெல்ல விழிமூட நடக்கத் துவங்குகிறேன்
செம்மண் தெரு நடந்து
நெல்வயல் வரப்பு கடந்து
தென்னந்தோப்பில் ஓடி முடித்து ஒரு
பெரியமேடு ஏறியிறங்கினால்...
நுரைததும்ப ஓடிக்கொண்டிருக்கிறது
வெள்ளைக்காவிரி..!
இளையராஜாவின் பெயரை
உச்சரித்தப்படியே...

◆ **தமிழ்க்குமரன்**



ஓவியம் : அன்பழகன்

தூவி விடப்பட்ட வார்த்தைகளிலிருந்து
மீண்டெழுந்து
நெடுந்தொலைவு பயணிக்கிறான்
அவன் நிழலாய் பேசும் வேர்வைதுளியில்
சில உண்மைகள் கசைந்து கொண்டிருந்து...
ஒவ்வொரு நிலையிலும் சுயபரிசோதனைப்
போல் தன்
வயதுடன் ஒப்பிட்டுக் கொள்கிறான்...
சிறு தடுமாற்றம் ஏற்ப்பட்டாலும் பலர்
இவனை பின்னுக்குத் தள்ளி முந்து கின்றனர்...
பார்வையாளர்கள் விழாமல் ஓடுபவனையே
செல்லமகனாய் அறிவிக்கின்றனர்...
அவன் பார்ப்பதற்கு வலிமைக்கொண்ட
உடல் அமைப்பாக தெரியவில்லை,
சிறிது நேர ஓய்வு வேண்டி அருகில் இருந்த
மரத்தடியில் அமர்கிறான்...
ஓடி வந்த நிழலின் பாசத்தில் தலைதுவட்டிக்
கொண்டு
பயணமாகிறான்...
ஒவ்வொரு வளைவை கடக்கும் போது அவன்
பெயர் பலகையை நட்டுவைத்து செல்கிறான்...
அவன் ஆகாயத்துக்கு குறி வைக்கிறான்
என்பது தெளிவாக தெரிகிறது...

◆ **செந்தாரப்பட்டி இரா. செல்வக்குமார்**

# வானத்தின் நிறங்கள்



ஓவியம் : அன்பழகன்

ஓங்காரமாய் சுழன்றடிக்கும்
பேரிரைச்சலுக்கு நடுவில்
சிக்கித்தவிக்கும்
என் சொற்களை பிரித்தெடுக்கிறேன்...
சாந்தப்படுத்தலின்பொருட்டு
பேரமைதியின் அறைகளில்
அவற்றை பூட்டிவைத்து
பதைபதைக்கும் மனதிடம்
மென் முறுவலை எதிர் நோக்குகிறேன்...
இரைச்சல்கள் ஓய்ந்தும்
சுதந்திரமற்ற வெளியில் பூட்டபட்ட சொற்கள்
புழுக்கத்தில்
வெறும் மௌனத்தை மட்டுமே
மொழிபெயர்க்கின்றன.....
அகட்டுகின்ற கசப்புகளும்....
தொண்டைக்குழிக்குள் எடுத்துக்கொண்டு
வெளியேவரும் புளிப்புமாய்
அகத்துக்குள் அமிலக்குடுவைகள் தளும்புகிறது...
இயலாமைகளின் மென்மைகள்
யாரையும் ஆற்றுப்படுத்துவதில்லை...
மாயா ஜாலக்காரனை
பார்ப்பவனின் கோணங்கள் மாறி
நம்பவைப்பதைப்போல...
ஆகாயம் நிறம் மாறி விட்டதென்று
நமட்டு குரலில்
அறிவிப்பு செய்துவிட்டுச் செல்கிறது
வஞ்சகத்தின் சந்தர்ப்பமொன்று...
சூரியன்...செஞ்சாந்து நிறத்தையும்
கடல்...நீலத்தையும்
மேகம்...இருளின் பிரதியையும்
நிலா...வெள்ளி பாய்விரிப்பையும்
அதனதன் விருப்பத்திற்கேற்ப
தங்களின் நிறங்களை
அகண்ட வானத்தில் பூசிக்கொண்டாடியபின்....
பிரதிபலித்த தங்களின் சாயக்கலவைகளை
வானத்தின் நிறமெனக்கூறி
எளிதாய் எழுதிவிட முயல்கின்றன...
ஆனால்...
உருவமற்று...நிறங்களற்று...
எப்போதும்போல் ஏதுமற்றதாகவே
நின்று கொண்டிருக்கிறது
எல்லாவற்றையும்
ஏந்திக்கொண்டிருக்கும் வானம்...!

◆ **சந்துரு**


ஓவியம் : அன்பழகன்

அன்று, ஆப்ரிக்க தொட்டிலில் நீயும் நானும்......

கால்களால் பயணிக்கிறான்
என்னைப் போலவே...

என் கண்கள்
காட்சிகளின் பதிவுகளின் கலன்கள்
அவனுக்கும் அப்படியே...

சுர அணுக்கள்
அவன் செவிப்பறைக்குள்
தகதமிதா
என் பறை மீதும் அப்படியே...

காதலைச் சாட்சியப்படுத்திட
பூங்காவில் இரு இதழ் கவ்வி மகிழ்கிறான்
என்னைப்போல....

கனவுகளும் காண்கிறான்
என்னைப்போல
புவிபரப்பில் பரவ வேண்டிய
பொதுவுடைமை பற்றி....

நிர்வாணமாக இல்லாமல்
தோலாடை அணிந்துள்ளான்
என்னைப்போலவும்
உலகின் எல்லோர் போலவும்...

அட , அவனும் மனிதன்தானே
என்னைப்போல..நம்மைப்போல....!!
எல்லோரும்
ஒரு தாயின் பிள்ளைகள்
ஒரு தந்தையின் வழித்தோன்றல்கள்
மலைகளால் தட்பவெப்பத்தால்
நிறம் மாறினோம்
நிலம் மீறினோம்
இனங்களாகினோம்..
என்றாலும்
ஸ்பென்சர் வெல்ஸ் இலக்கணப்படி
அவன் என் குடும்பத்தின்
ஓர்அங்கம்
அன்று,
ஆப்ரிக்க வனத்தில்
ஒரே தொட்டிலில்தான்
அவனும் நானும்.....!!!

பிறகென்ன இன்று இப்படி
எச்சரிக்கை விடுகிறீர்கள்,
"நீக்ரோ என்றோ கருப்பர் என்றோ
விளிக்காதீர்கள்
ஜாக்கிரதையாயிருங்கள்.."

◆ **அகன்**


ஓவியம் : அன்பழகன்

வறண்ட காற்றின் நீள நாக்கு அத்தனை
ஈரத்தினையும் சுவைத்தபின் வளைந்து வருகிறது

ஊறிய வாய்நீரின் சுவையை வாங்கத்தான்
சுழற்றிச் சுழற்றி வீசுகிறது
இந்தக்குளிர் உறைகிறது போக்குவரத்துக்கென
நியமிக்கப்பட்ட பாதையைத்
தனதாக்கிக்கொண்டவனின் ஆடையற்ற
தேகத்தில்

ஒரு வேண்டுகோளை சிலேடைப் போல
தூக்கிக்கொண்டு ஓடி வருகிறான்
குழிக்குள் தவறி விழுந்த தனது சொற்களை
நனையாமல் எடுக்க

அது நீரற்ற சேறு
மிதந்த சொல்லின் கலங்கிய எழுத்து
வீசாத மென்காற்றின் கைகளைப் பிடித்தும்
கெஞ்சிப் பார்க்கிறான்

கேட்பதற்குச் செவிகளற்ற சொற்களைப்
பேசுபவனின் உலகம்
அந்தச் சேற்றில் தான் புதைந்திருக்கிறது

உண்டாட்டுக் காலத்தில் இருக்கிற காற்றுக்குக்
தெளிகிற வரைக்கும்
வாழ்கிற பூச்சிக்கும் தீராத வறட்சி தான்!

◆ **கார்த்திகேயன் மாகா**



ஓவியம் : அன்பழகன்

அவளொரு
பட்டாம்பூச்சிக்காரி ...

உதட்டு மச்சமோடு திரியும்
பட்டாம்பூச்சிகளுக்கு
அவளது சாயல்

திடீரென அருகினில்
மகிழ்ந்திருப்பாள் சில நொடிகள்
திடீரென அவளை
துறந்திருப்பாள் சில நொடிகள்
திடீரென என்னை
பிரிந்திருப்பாள் சில நொடிகள்
ஏனெனக் கேட்டால்
பட்டாம்பூச்சி பழக்கம் என்கிறாள்

சொல்வதற்கென்று
ஒரு காதலிருந்தது
என்னிடத்தில்
அதையும் பறித்துக் கொண்டாள்
இப்போது
நானொரு காதலில்லா ஜடம்

என்னுலகம் முழுதும்
பறந்து திரிகிற
அவளது திசையில்
பூக்கள் முளைத்தெழுகிறது
இதயத்தை தைக்கும்
நீள் முட்களோடு

பட்டாம்பூச்சிக்கு என்ன தெரியும் ?
பறக்க
சிரிக்க
பிறகு
நேசித்தே சாகுமெனை
மறக்க

சட்டென்று ஒரு க்ஷணத்தில்
என் விரல்களை
முத்தமிட்டு
பிரியம் தந்த அவளுக்கு
அன்று மனபிறழ்வு

ஏய் !
பட்டாம்பூச்சிக்காரியே
தேசம் தொலைத்து நீ பறந்தாலும்
நேசம் மறவா பரதேசி
நானென்பதை
நினைவில் வை நீ ...
வேதவிதா.

◆ **சாமான்யன்**

இது என் வாசல்
இதன் வழியே கடப்பது உங்களுக்கு
விருப்பத்தைத் தரலாம்
ஒவ்வாமையைத் தரலாம்
வெறுப்பைத் தரலாம்
இதன் வழியே ஏன் கடக்கவேண்டும்
என்ற வெறுப்பைத் தரலாம்
மயக்கத்தைத் தரலாம்
எந்த எண்ணமும் இல்லாமல் பயணிக்கும்
எண்ணத்தை மட்டுமே தரலாம்
இவ்வாசல் பார்த்து இதே போல் வேறு ஒரு
வாசல் நீங்களமைக்கும் வாய்ப்பைத் தரலாம்
உள்ளே எட்டிப்பார்த்து திரும்பிவிட
முயற்சிக்கலாம்
நான் பார்த்தால் பேசலாம்
பார்க்காவிட்டால் என்னை என்ன செய்கிறேன்
என நோட்டமிட்டுத் திரும்பலாம்
இது யார் வாசல் என்பதற்காக நின்று
பார்த்துவிட்டுப் பயணிக்கலாம்
நான் மட்டும்தான் இருக்கிறேனா
வேறு யாராவது உடன் இருக்கிறார்களா என
எண்ண வைக்கலாம்
இவனுக்கு எதற்கு வாசல் என்று தோன்றச்
செய்யலாம்
யாரும் பார்க்காதவாறு கல் எடுத்து
வாசலுக்குள் எறிந்துவிட்டுச் செல்லலாம்
இன்னுமா இந்த வாசல் இருக்கிறது என்ற
குரூரத்தை உங்களுக்குள் தோற்றுவிக்கலாம்
உங்களுக்கு எப்படியோ
எனக்கு அது என் வாசல்
இத்தனை நாள் அதனை நான் மூடினேன்
திறந்தேன்
காற்று முத்தமிட அனுமதித்தேன்
இப்போதைய உங்கள் காரணங்களுக்கு என்
வாசல்
பதிலாக இருக்க வேண்டிய அவசியமில்லை
இனி பூக்கும் கேள்விகளுக்குப் பதில் என்னிடம்
கேட்கமுடியாது
வாசலும் மௌனத்துடனேயே இருக்கும்
நீங்களாகவே முடிந்தால் ஒரேயொரு
கற்பனைப் பதிலை உருவாக்கிக்கொள்ளுங்கள்
இப்போது இந்த வாசலைப் பூட்டிக்கொண்டு
நான் தற்கொலை செய்யப்போகிறேன்.



ஓவியம் : அன்பழகன்

◆ **யாழ் தண்விகா**



ஓவியம் : அன்பழகன்

நெகிழியின்
நெஞ்சுண்டு செரிக்கும்
நெப்பன்தஸ் காடுகள் ?

விதைகள்
விழுந்த மறுநொடி
விருட்சமாகும் வித்தை ?

தேவைப்படும்போது
திறந்துகொள்ளும்
மேக நதி !

உயிர் குடிக்கும்
பட்டினிப் புழு
நுழையமுடியாத வயிறு ?

உலக காற்றை
ஊற்றி வடிகட்ட
ஒரு மந்திரத் துணி ?

அரசியல்வாதிகளுக்கு
மட்டுமே வரும்
ஒரு வியாதி ?

மனிதம் சிதைக்கும்
போரென்னும்
புதைகுழிக்கொரு மூடி ?

அடிமைப்பட்ட
விலங்குகளுக்கு
காடோழுகுமோரு பாதை ?

படிக்க நினைக்கும்
பசுந்தளிர் மொட்டகளின்
உரமாகும் குரு ?

கண்ணைக்குடிக்கும்
அலைபேசிகளில்
வாய்புகும் அரளி ?

அதிகபட்சமாக - என்ன
கேட்டுவிடப் போகிறது
அலாவுதீன் விளக்கு ?
சுயநலங்களை தவிர்த்து
பொதுநலன் தவிர !

விளக்கின் ஆசைகள்
வெளிச்சத்தின்
நிழற்களுக்குள்
விழித்தபடி நிற்கின்றன !

பூர்த்த செய்ய வேண்டாம்,
சில ஆசைகளுக்கு
காதுகுடித்தால் போதும் !

◆ **வினோதன்**



ஓவியம் : அன்பழகன்

அசாத்தியத்தின் கனவொன்று காத்திருக்க
கண்களிரண்டையும் இமை மூடாதிருக்கிறது
என்னவோ போலிருக்கிறது ஆன்மாவிற்கு.
அசூயை படர
ஸ்பரிசத்தின்மேல் படரும் பார்வையைக்
கொத்தியெறிகிறது தினவேறிய திமிர்.
நாள் ஒவ்வொன்றின்
திசைகளில் பதிந்துவைக்கப்பட்ட கண்களின்
வழியே
பிம்பங்களைத் தொலைக்க யாரைக்
காரணியென்று காட்ட முடியும்.
நிலம் காணா மழைத்துளியின் ஏக்கம்
போலொன்று உயிரில் கவிந்து கிடப்பது
எத்தகைய வருத்தமும் அளிக்கவில்லை.
விருப்பங்களின்போது மட்டும்
உருவம் வந்துவிடச் செய்யும் வித்தை
தெரிந்திருப்பது எவ்வளவு சிறப்பாயிருக்கும்...
அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நினைவுகள்
உயிரைக் கலைத்துப்போடும்
என்றாவது புரட்டிப்பார்க்கும்போது.
படரும் ஊதுபத்தியின் வாசனை எனக்கு
மட்டும்தான் இறப்பின் ஓரமாக இருப்பதைப்
போலவே இருக்கிறதா
பட்டாம்பூச்சிகளும் தும்பிகளும்
விரட்டிக்கொண்டு
பூக்கள் பறித்துக்கொண்டு
மண்ணில் கூட்டாஞ்சோறு ஆக்கி
விளையாடிக்கொண்டு இருந்த காலத்தை
இப்பருவத்தின் தேடலில் நிறுத்திவைத்துப்
பார்க்கிறது ஏக்கங்கள்
ஆனாலும் நான் என்பதற்குள்ளாகவே
இத்தனையையும்
சுமக்க
நான் என்பதற்றுப் போனால் என்ன...

◆ **ஷீலா_கடற்கரை**



ஓவியம் : அன்பழகன்

எப்போதும் சலனமற்றுக் கடக்கும்
அந்த பாதையில் இன்று
அவ்வளவு இலகுவாய்
கடந்துவிட முடியவில்லை,
தலைமுறை கடந்தும்
எல்லாவற்றுக்கும் அடையாளமாய் நிற்குமந்த
மகிழம்பூ மரத்தை...
சரி செய்யப்படும் வரிசையில்
இடம் கிடைக்குமா என்று
கேட்க நினைத்த மாத்திரத்தில்
«உனக்காக தொழவைக்கும் முன்
நீ தொழுதிருக்கவேண்டும்»
என்று நெட்டித் தள்ளியது ஓர் குரல்...
அளவாய் தோண்டியமண்ணறை
இதமாய் சாய்கிற வேப்பமர நிழல்
அழகாய் பதியமிட ஆயத்தமானார்கள்
உள்ளே புழுக்கம்
கையில் மண்ணோடு காத்திருக்கிறார்கள்
குழியில் இட்டு
கணக்கை சமன் செய்ய உறவுகள்
குறுக்கும் நெடுக்குமாய்
அலைந்த மண்வெட்டியால்
மேடாக்கப்பட்டது அடையாளம்
உதிர்த்திப் போடப்பட்ட
பூக்களின் முகங்களும்
வாடித்தான் போயிருந்தது...

◆ சகா



ஓவியம் : அன்பழகன்

கைகால்கள் சிதறிக்கிடந்தன
தலை முற்றிலும் நசுங்கி இருந்தது
இறக்கும் முன் எவ்வளவு வலித்திருக்குமோ

மிதித்துக்கொன்ற புத்தனின் கால்களில்
எறும்பின் வலி இன்னும் ஒட்டியிருக்கிறது

◆ **அகதா**

இது தான்
உனக்கு உணவைச் சமைத்துத் தரும்
நிலவெனக்
கொஞ்சும்
தாயின் குரலும்...

இதுதான் உனது உணவென எண்ணி
இன்றைய பசியாற்றிக் கொள் என
நிலவைப் பறிக்கும்..
தாயின் குரலும்..

வறுமையுறாத
பேரன்புக்குரிய வார்த்தைகளெனவே
எண்ணிக் கொள்ள
வேண்டியதாயிருக்கிறது...!

◆ **ஜே.ஜே.அனிட்டா**

எறும்புகளிடம்
எப்போதும் ஒரு ஆசை
வளரத் தொடங்கியது

அருகிலிருந்த மலைகளை
அது துரத்திக் கொண்டிருந்தது

மலைகளை
தின்ன முடியவில்லை என
எறும்புகள் புலம்புகின்ற
ஆசை அது

மலைகளின் மேற்பரப்பில்
அடுத்ததாக
ஒரு சம்பவம் நிகழ்கிறது

பறவைகள் சில
மலைகளை தூக்கிச் செல்கின்றன
மன்னிக்க,
எறும்புகளை தூக்கிச் செல்கின்றன

முடிவுறா இக்காட்சியில்
எனது கவிதை
மலைகளைப் போல் வளரத் தொடங்குகிறது
அதன் மேல்
பறவைகள் தூக்கிச் சென்ற
எறும்புகள்
சொற்கள் என ஊர்ந்து திரிகின்றன

எறும்புகள் மலைகள் என நினைத்து
எனது கவிதையை தின்றுவிடும் என அஞ்சி
இந்த கற்பனையிலிருந்து
எறும்புகளை
ஒரு சில வருடங்களுக்கு
மிக தூரமாக வைக்கின்றேன்.

◆ **ஏ.நஸ்புள்ளாஹ்**



**ஓவியம் : அன்பழகன்**

# சில நேரங்களில் நானும்



ஓவியம் : அன்பழகன்

நீலவானம்
நிறமிழந்து இருள் பூசிக்கொண்டிருக்கும்
வேளையில்

நம்பிக்கையோடு சொல்லப்பட்ட
இரகசியமொன்று சுயமிழக்கின்றது

நடுநிசி கரைகின்ற பொழுதில்
நாய்களின் ஊளையும்
நகர்கின்ற காற்றும்
நீட்டி நிமிர்ந்து சோம்பல் முறிக்க

ஆகச்சிறந்த நல்லவர்களென்ற முகமூடிகள்
மெல்லக் கழன்று
மெதுவாய் நகர்ந்து
அனுமதியில்லா அந்தரங்கம் சுவைக்கின்றன

எல்லாம் கையிலிருந்தும்
ஆதி மனிதனுக்கு
கொடுக்கப்பட்ட அரத்திப்பழத்தின்
மீதி சுவையறிய ஏங்குகின்ற
மனதின் உறக்கத்தை
நிம்மதி உண்கின்றது

சில்லறைத்தனமான சிந்தனைகளை கண்டு
சலித்துப்போன இரவு
வெறுத்துப்போய் விடிய

வெளிரிப்போன மனிதர்கள்
வெளுக்காத சாயங்களை
பகலில் பூசிக்கொள்கின்றனர்

சில நேரங்களில் நானும்
சாயம் தேடியலையும்
வெளிரிப்போன மனிதன்தானென்றாலும்

ஆமென்று ஏற்றுக்கொள்வதை விட
இல்லையென்று மறுப்பதே
இங்கு சத்தியமாகின்றது

◆ **சிபி பாரதி**



ஓவியம் : அன்பழகன்

வழிப்போக்கன் இறக்கிவிட்ட புத்தன்
பெருநகரிலிந்து விலகும் ஊருக்குள்
பேந்தப் பேந்த விழித்தபடி செல்கிறான்.
ஆடை மறைக்காத
அவன் வலப்பக்க முதுகில்
அடி வாங்கிய தழும்பு.
மயிற்பீலிகளை எங்கோ மறந்து
வைத்துவிட்டான் போல.
முழுதும் வெட்டப்பட்ட
போதிமரக் கிளையில்
தார்ச்சாலையின்
பயணக் களைப்புத் தீர அமர்கிறான்.
பின் தொடர்ந்து சென்றவன் கையளித்த
ஒரு குவளை ஆழ்துளை நீரைச்
சொட்டு வைக்காமல் பருகியவன், திருப்பத்தில்
நின்ற சிற்றுந்தில்
நிதானமாய் ஏறுகிறான்...
அவசரப்பட்டுத் தொலைத்த ஆசைகளும்
யசோதரை, ராகுலனும்
நிறுத்தத்தில் நிற்கக்கூடும் என்ற
நப்பாசையுடன்.

◆ **மா.காளிதாஸ்**

ஓவியம் : அன்பழகன்

மழைக்காலத் தேவதைகள்
மழை முகில் திறக்கும் அந்தி வானமெங்கும்
படரும் ஒளி ரேகைகள்
இன்று விண்வெளித் தேவதைகள்
சூடிப்பார்க்கும் தங்க ஆபரணங்கள்
முதல் துளி தலையை தொட்டதும்
தேவதைகளாகி விடுகிறார்கள்
எங்கள் வீட்டுப்பெண்கள்
நாணத்தின் கதிர்வீச்சில் தேகமெங்கும்
பூக்களாகப் பூக்கின்றன சுமையற்ற பால்யத்தின்
மின்னல்கள்
நமக்காக ஒருவர் அழுதுகொண்டேயிருந்தால்
யாவருக்கும் பிடிக்கும் தானே ?
தவிர உச்சியிலிருந்து விழுந்து நதியாவதும்
கடலாவதும்
குளமாவதும் குட்டையாவதும்
தேங்கிய மண்ணில் சேறாவதும் அதன்
தவறில்லை தான்
ஆனாலும் நமக்காக ஒருவர் சோவென்று
அழுதுகொண்டிருந்தால்
யாருக்குத்தான் பிடிக்காது சொல்லுங்கள்?
தாய்மை பொங்கிய மார்பில் தானாக துளிர்த்த
ஒரு சொட்டு அமிர்தம் போல
எங்கோ எப்பொழுதோ எவருக்கோ
வேதனையில் துளிர்த்த ஒரு துளி கண்ணீருக்கே
இந்த மழை இன்று சமர்ப்பணம் என்றால்
அந்த எவரோ ஒருவர் ஏன் நாமாக
இருக்கக்கூடாது
என்று நினைத்துக்கொள்ளுவார்கள்
எங்கள் வீட்டுப்பெண்கள்



ஓவியம் : அன்பழகன்

◆ தங்கேஸ்

# கோடை_வருத்தம்.



ஓவியம் : அன்பழகன்

நான்கு திசையும்
பேய் பிடித்து வீசுகிறது
ஒரு சதிக்காற்று
மண்ணள்ளியும் எறிகிறது
இது மரங்களுக்கு
உதிர் காலம் போல...
கிளை பிரிந்து நிழல்தேடி
அலைகின்றன இலைகள்

வேர்கள்
தன் கடைசிப் பாடலை
மொழிய மொழியின்றி
மௌனித்துக் கிடக்கின்றன
இதே மண்ணுள்

மீன்களை விழுங்க எத்தனித்து
நீரை குடித்து இறந்து கிடக்கிறது குளம்

தவளைகளின் முடிவையும்
இப்பொது
எழுதத் தொடங்கி விட்டது கிணறுகள்

பற்று வைப்பது கூட
பாவமான காலத்தில்
பயணிக்க பணிக்கப்பட்டிருக்கின்றோம்
என்பதுதான் இந்த
வலியும் வருத்தமும்

இங்கு
காலத்தை காவிச் செல்கிறது காவி
வாழ்வை
தக்க வைப்பதற்குக் கூட
வழக்காட வேண்டியிருக்கிறது

கடந்த வருடம் சொன்னாய்
இவ்வருட விடுப்புக்கு நாடு திரும்புவதாய்

கோடை வருத்தத்தை தவிர
நீ வருவதால் உனக்கு எந்த மகிழ்வும்
வரப்போவதுமில்லை

நீ வராமல் இருப்பதால் எனக்கு எந்த
கவலையும்
தரப்போவதுமில்லை!

◆ **ரோஷான் ஏ.ஜிப்ரி**



ஓவியம் : அன்பழகன்

முப்போகம் விளைவித்த
நிலப்பெண்ணின் முதுகில்
முதுமையின் ரேகைகள்
படர்ந்திருந்தது

மழை வேண்டி
வளர்த்த யாகத்தில்
எரிந்த மரங்கள்
சிரித்துக்கொண்டன

ரசாயன விஷங்களை
கலந்துவிட்டு
மண்ணை மலடென்றனர்
ஆண்மையற்ற சிலர்

திருடியவனிடமே
மீட்டுத்தர கொடுக்கப்பட்ட
மனுக்களில் தான்
ஏரிக் குளங்கள்
காணாமல் போய் இருந்தது

மணல் கொள்ளை
தடையின்றி நடைபெற
தடுப்பணைகள்
தாமதிக்கப்பட்டுக்
கொண்டிருந்தது

ஆளத் தெரியாதவனை
அரசனாக்கிவிட்டு
மக்களாட்சி என்று
மார்தட்டிக் கொண்டனர்

வாக்கை விற்றுப் பணத்தில்
நீர் வாங்கி
பிட்டத்தைக் கழுவிக்கொண்ட
கதைகள் மட்டும்
ரகசியம் பேணப்பட்டது.

◆ **சுரேஷ்பாபு_ராசேந்திரன்**

# தொலைபேசியிலாவது சொல்



ஓவியம் : அன்பழகன்

எப்போதும் ஏலக்காய் அல்லது
இஞ்சித் தேநீர்

மூளை நாக்கு மனசு மூன்றிலும்
சுவைநீர் சுரக்கச் செய்யும்
அதே எண்ணெய்க் கத்தரிக்காய்

எம்.ஜி.ஆர். கலைஞர்
வலம்புரி ஜான் காளிமுத்து
வைகோ வைரமுத்து
தேசியத் தலைவர் பிரபாகரன்
இனம் மொழி ஈர்ப்பும் வெறியும்

இருநததில்லை சொற்பயணம்
காதல் காமம் பேசினாலும்
அரசியல் தேரடியில் இறங்காமல்

அந்தப் பழைய அழகிகள்
அந்தப் பழைய ஆசிரியைகள்
அந்தப் பழையப் பள்ளிக்கூடம்
அந்தப் பழைய வகுப்பறை

முட்டி மோதி மூளை அயர்ந்தெழுப்பும்
இதே கேள்விகள் எனக்கும்

இருந்தும் இதேதான் தொடர்கிறது
எப்பாலின சந்திப்பென்றாலும்

அப்படித்தான் நிகழ்ந்தது
அந்த சந்திப்பு நேற்றும் வெதுவெதுப்பாக
அடராழ்நீள் ஆவலில்

எழுந்தனவா இதே கேள்விகள்
உனக்கும்?
தொலைபேசியிலாவது சொல்
நிகழவே நிகழாத மாற்றமெனில்

◆ ரா.ராஜசேகர்



ஓவியம் : அன்பழகன்

அவளுக்காக வாங்கி தந்த
ஐஸ்கிரீமில் முதல்
ஸ்பூனை எடுத்து
எனக்கு ஊட்டுகிறாள் மகள்
கடவுளே அமிர்தம் தருவதாக
எண்ணி பயபக்தியுடன்
வாங்கி கொள்கிறேன் நான்......

முதல்முறையாக ஒரு
ரோஜா செடியை
வீட்டு தோட்டத்தில்
நட்டு வைக்கிறாள் மகள்
அன்றிரவே பெய்யும்
திடீர் பெருமழையில்
நனையாமலிருக்க
இரவெல்லாம் அதற்கு
குடைப்பிடித்தபடியே
நனைந்து கொண்டிருக்கிறேன் நான்......

கதவை திறந்தவுடன்
ஓடிவந்து கட்டியணைத்து
கொள்கிறாள் மகள்
அதற்காகவே எவ்வளவு
தொலைவு சென்றாலும்
நள்ளிரவானாலும்
வீடுவந்து சேர்கிறேன் நான்.......

தேவதை கதைகள்
சொல்லும்படி
நச்சரிக்கிறாள் மகள்
அவளை பற்றியே
அவளிடம் எப்படி
சொல்வதென விளங்காமல்
முழித்து கொண்டிருக்கிறேன் நான்.......

#மகள்

◆ **பிரபுசங்கர்_க**

# அவள்..அது..

அவள் அதுவானபோது
அவள் புழங்கிய பொருள்களும்
அந்நியமாக அகற்றப்பட வேண்டியதாக

பொன்னுக்கும் மண்ணுக்கும்
இன்னும் சிலபொருள்களுக்கும்
தோசமில்லை

மின்மயான அடுப்பில் சொருகித்
திரும்பிய பின்னும்
இன்னும் புகைந்துகொண்டே இருக்கிறது
பாடையைத் திருப்பிய முக்கில்
பற்றவைத்துவிட்டுச் சென்ற அதன்
படுக்கை.

◆ **சக்திஅருளானந்தம்.**



**ஓவியம் : அன்பழகன்**

பிரபஞ்சத்தின் சிறு துளி நீரை
நகக் கண்களில் ஏந்தி
சுசிகரமாய் இசைக்காரற் குருவியிடம்
ஏந்தலித்து
அதனலகால் பருகிடும் பொருட்டு
விழும் சொற்களின் எச்சங்களைத்தான் பூமி
தன் கவிதைகளை எழுதுகிறது மரங்களாய் ....

◆ **ராம் பெரியசாமி**

# ஜெனீஃபர்
# இயற்பியல் மூன்றாமாண்டு



ஓவியம் : அன்பழகன்

அப்போதெல்லாம்
ஜெனீஃபர் எப்போதும்
எனக்கொரு
மாயதேவதை.

என் எல்லாக்
கவிதைகளிலும்
ஜெனீஃபர் வாசமோ
அல்லது சுவாசமோ
அடர்ந்திருக்கும்.

கோதுமை நிறம்
உதட்டோர மச்சம்
கன்னத்துக் குழி
ஆங்காங்கே நெளிவுகள்
மயில் நீலப் புடவை
இப்படித் தான் தெரியும்
ஜெனீஃபர் பிம்பம்.

இயற்பியல் முன்றாமாண்டுக்குப்
பின் காணமால் போன
ஜெனீஃபர் ஏதோ
ஒரு சர்ச்சில்
ஜோசப்பையோ
ஆல்பர்ட்டையோ
எட்வர்டையோ
கைப்பிடித்திருக்க வேண்டும்.

போன வாரம் வரை
கதைகளில் சிண்டரெல்லா
எப்படி இருப்பாள்
எனக் கேட்கும்
மகளுக்கு ஜெனீஃபரைப்
போலிருப்பாள் என
தொண்டை வரை வந்ததை
அடக்கி வைக்கத் தான்
வேண்டியிருக்கிறது.

◆ மதுசூதன்

# இரவுகளின்_மொழிகள்

ஒரு நள்ளிரவின் ஈரமது என்று நினைக்கிறேன்
பச்சை விளக்கு மாறியும்
ஒரு சிவப்பு விளக்குக்காய் காத்திருந்தேன்
பரபரப்பான வாகனங்களைக் கழுவிய சாலை
ஒரு வியப்புடன் நம்மைப் பார்த்துக்
கொண்டிருந்தது
இங்கேயே இறங்கிக் கொள்கிறேன் என்றாய்
இருட்டில் நீ மறையும்வரை
என் பார்வைகள் மரணித்துப் போயிருந்தன
நீ உதிர்க்க வேண்டிய ஓரிரு வார்த்தைகள்
இருக்கையில் உதிர்ந்திருந்தது போல்....
உன்
உதடுகள் உதிர்க்காமல் விட்ட
வார்த்தைகளில்தான்
நான் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதாய்
இப்போதும் நம்பிக் கொண்டிருக்கிறேன்

◆ **முனியாண்டி_ராஜ்**



ஓவியம் : அன்பழகன்

எவரிடமிருந்தும் கற்றுக்கொள்ள
ஏதேனுமொன்று இருக்குமென
எப்போதும் நம்புமெனக்கு
உன்னிடமிருந்து கற்றுக்கொள்ள
ஒன்றும் இருக்காதா என்ன?

எதையாவது சொல்
இல்லாவிட்டாலும் பரவாயில்லை
இந்த மௌனம் கற்றுத்தருகிறது
ஒன்றை.

◆ **தமிழ்மணவாளன்**



ஓவியம் : அன்பழகன்

ஒரு அலங்காரத்தை கலைப்பதை போல..
ஒரு ஆபரணத்தை களைவதை போல..

எந்த வருத்தமுமின்றி..
எவ்வித தயக்கமுமின்றி..

அவ்வளவு எளிதாய் அவர்கள் வாழ்விலிருந்தும்
ஒருவரை அகற்றி விடுகிறார்கள்..

நேற்றுவரை
அந்த ஒருவர் எவ்வளவு முக்கியமானவராய்
இருந்தார்
என்பதும்..
அவர்களால் அவர் எந்தளவு கொண்டாடி
தீர்க்கப்பட்டார்
என்பதுவும்..
தடயமேதுமின்றி
அழிக்கப்பட்டும்
விடுகிறது..

நேசத்தை எழுதிய கரங்களாலேயே
அதை
இரக்கமின்றி கிழித்தெறியவும்
துணிந்து
விடுகிறார்கள்..

இன்னும்
உறவென்பதும்..
பிரிவென்பதும்..
இவ்வளவுதானா..? என
இழித்துரைக்கும்
காலத்தின் முன்னால்
வெறுமனே
தலைகுனிந்து நிற்கிறேன்..

இனி
மனிதர்கள் அப்படித்தான்
அவ்வளவுதானெனும்
சுய சமாதானங்களுடன்
யாரும் என் முன்னால் வந்து
நின்று விடாதீர்கள்..

நிற்க
முன்பொரு நாளில்..
இளைப்பாறி நின்ற நிழலினை
தேடிச்செல்கிறேன்..

இப்போதங்கே
முறிந்து வீழ்ந்திருக்கின்றன..
ஒரு பெரு மரமும்
அதன் மீதிருந்த சிறு பறவைக்கூடும்!!!

◆ ரிஸ்கா முக்தார்

# புத்தனின் கடைசி முத்தம்



ஓவியம் : அன்பழகன்

கண்களில் நிற்காமல் வழிகிறது கண்ணீர்
எதையும் மாற்ற இயலாமல்
பொய்யாகிவிட்டது
சூழலின் மீதான
நம்பிக்கை

அடுத்தவர்களின்
எண்ணங்களை
சுவர் எழுப்பி
மூடிக் கொண்டிருக்கும்
வினோதங்கள்
அன்றாட நிகழ்வான
மனங்கள்

வெடித்துக் கிடக்கும்
பூமிபோல
இருப்பதால்
பிளந்து பார்க்கிறது
அவன் அஹிம்சை

சுற்றி
ரத்தம் வழிந்தோட
ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கிறது
புரையோடிப்போன
ரணங்கள் மீது

செயல் விளங்காத
மனதோடு
மூடிய விழிகளையும்
திறந்துவிடப் பயந்து
அமைதியிழந்து
கனமான நெஞ்சின்
வலிகளை மறைத்து

தன் கடைசி முத்தத்தையும்
வழங்க யாரும்
இல்லையென
மீண்டும்
அமைதியாக
அமர்ந்துவிட்டான்
புத்தன்...

◆ **லக்ஷ்மி**

தவறிழைத்தவன்,
"பாம்பைத் தொடாதே கடித்துவிடும்"
என்றவனுக்குப் பக்கத்தில்
நிற்கிறான்..
உருண்ட தலையும்
சுருண்டிருக்கும் விதத்தையும்
விவரித்து,
"கடும் விசங்கொண்டது" என்கிறான்
தவறிழைத்தவனுக்குப் பின்னால் நிற்பவன்..
நையப்புடைக்கும் எண்ணமழிய
பாம்புதானோவென ஐயங்கொள்கிறேன்..
அவர்களோடு சேர்ந்து
நானும் அடிக்கிறேன்
உயிரற்ற அந்தச் சாட்டையை.

◆ **பா_வினோத்குமார்**



**ஓவியம் : அன்பழகன்**

கிளையில் அமரும் பறவை
வளைந்து வளைந்து இருக்கிறது
தொலைவில் மலை

◆ **சாண்டில்யன் விவேகானந்தன்**

# அவர்கள்_அப்படித்தான்



ஓவியம் : அன்பழகன்

சடங்கான மகளுக்கு
தெரியாமல்..
அர்த்தசாமத்தில்
கணவனின் நெருக்கத்தில்
இருந்தவளை..
ரவிக்கை சரி செய்து
தள்ளிப் படுக்கச் சொல்லும்..
கட்டளையாக இருக்கலாம்.

அசைபோடும் தாய்ப்பசுவிடம்
பால் குடிக்கும் கன்றுக்கு
போதுமென்ற
குழந்தையின் பசி
வேண்டுகோளாக இருக்கலாம்.

கதவு திறந்து
கோலம் போட வரும்
கனகாவின் காதலனை
வரச் சொல்லும்
காதல்..
கீதமாக இருக்கலாம்

கலப்பயே ஆயுதமாக கொண்ட
கந்தசாமியை
கழனி அழைக்கிறதென்ற
பன்னாட்டு தரகரின்
எகத்தாளச்
சிரிப்பாக இருக்கலாம்.

காத்திருக்கும் குடங்களின்
காவலுக்கு செல்ல..
பெண்டுகளை எழுப்பும்
தமிழகத்து..
தாகமாக இருக்கலாம்.

வெட்டவெளியில்..
அவசரத்திற்கு வந்த
பெண்களை
அவசியத்திற்கு
எழுந்திருக்க சொல்லும்
தேசத்தின்..
ஓலமாகவும் இருக்கலாம்.

அதிகாலைப் பொழுதில்
எவருமற்ற இடத்திலும்
ஒலியெழுப்பியே..
விரையும்..அந்த இரயில்.

◆ நயினார்

# பித்தலாட்டம்

காயங்களுக்காய் போடப்பட்ட
கட்டுகளுடன்
கையேந்தி பிச்சைக்கேட்கும் அவன்
கணிசமாய் சில்லறை சேர்க்கிறான்
அதிகபட்ச நொண்டுதலுடன்
சிரமப்படுவதாய் அவதானிக்கும்
எவரொருவரும்
சும்மாய் கடப்பதில்லை அவனை
எத்தனை கண்கள்
பார்த்திருக்கும்...
எவரெவர் நெஞ்சம்
கரைந்திருக்கும்...
அத்தனைக் கருணையை
அநாயசமாய் சம்பாதித்த அவன்,
அடுத்துபுறப்பட்டதொடர்வண்டியில்
அதிவேகமாய் ஓடி ஏறும்போது
என்னைப்போல் எத்தனைபேர்
அதிர்வில் புதையுண்டிருப்பார்கள்.

◆ **மயிலாடுதுறை இளையபாரதி**



**ஓவியம் : அன்பழகன்**

என் பாக்கெட் சாளரங்களுக்கு
பஞ்சமில்லை
துரோகங்களுக்கு பதில் மலர்கள் நிரம்பியிருக்கும்

காற்றின் நீச்சல்களில்
என் மணம் உங்களை அடையலாம்
வருவேன் மலர்களாக
முட்களுக்கு பதில் மலரை கிரீடமாய் தருவேன்!

அன்பின் வாசம்
அலைகளிலிருப்பதில்லை
என் மலர்களில் பூத்திருக்கலாம்...

மலர்களால் அன்பினை செய்பவன்
அன்பின் கூடுகளில் துரோகங்கள்
முளைப்பதில்லை.

◆ **வீரசோழன்.க.சோ. திருமாவளவன்**

# பாவமாய் சில பயணங்கள்..



ஓவியம் : அன்பழகன்

திண்ணைகளில்
தோலுரிக்கப்படும்
அடுத்தவீட்டுக் கதைகள்
புளியம்பழங்களுடன்..

எப்படியோ மோப்பம்
பிடித்துவிடுகின்றன
உப்பு மூட்டைகளை
சுமந்து
தெருக்களில்
ஊர்வலமாக வரும்
கழுதைகள்..

கொளுத்தும்
சூரியனில்
திண்ணைகளற்ற தெருக்களில்
இப்போதெல்லாம்
பொதி சுமந்து
பறக்கின்றன..
இரும்பு
குதிரைகள்..
ஆரஞ்சும்
பச்சையுமாய்...

◆ மு.ச.சதீஷ்குமார்

# நினைவுகள் அலைக்கழியும் கடல் மனம்



ஓவியம் : அன்பழகன்

சொற்கள் சிலசமயம் உண்மைசொல்லக்கூடும்

மொழிக்கு முன்பான வாழ்வு
வனத்தின் கருப்பைக்குள் மிதந்தது
அப்போது
பொய் என்று ஏதுமில்லை
உண்மையும்

உண்மையில்
உண்மைதான் மொழியின் மாபெரும் வன்முறை
அது
வேறுபல உண்மைகளை நிராகரித்தே
பொய்யைப் படைத்தது

பொய் என்பது
உண்மையின் மறுபக்கம் அல்லது
தோற்றவர்களின் உண்மை

காடுவிட்டு நாடுவந்து
நதிக்கரையில் குடியமர்ந்து
வீடுகட்டப் பழகியபின் வந்திருக்க வேண்டும்
நான் எனது என்பது

நாம் அழிந்து நான் பிறந்த மாற்றத்தை
நாகரிகம் என்கிறது
நாக்கூசாமல் மொழி

உடலை மறைக்கும் மொழி ஒரு திரை
கனத்த திரை

கண்ணீர்த்திரை வழியே
காணுகிற உலகம்
காடே பிரம்மாண்டம் என்கிறது

காடு நினைவுவந்த
உயிர்களது கனவுக்குள்
கர்ஜித்து எழுகிறது
போராடும் உணர்வு

◆ கோ.கலியமூர்த்தி

# புதிய நூல்கள் வெளியீடு














































**புத்தகம் வேண்டி தொடர்புக்கு : சலீம் கான் - 9790821981**